**செ.வெ.எண்:27 நாள்:23.7.2020**

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பு பணிகள் தொடர்பான கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் (22.7.2020) அன்று ஆய்வு மேற்கொண்டார்.**

**கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நபர் தங்களின் அவசர தேவைக்கு என 04343- 230042 என்ற எண்ணில் உடனடியாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இயங்கி வரும் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பு பணிகள் தொடர்பான கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் அரசு துறை அலுவலர்களிடம் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

**கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நபர் தங்களின் அவசர தேவைக்கு** கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் கோவிட் கேர் சென்டரில் **04343- 230042 என்ற எண்ணில்** தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும் கட்டுப்பாட்டு பகுதி என கண்டறிப்பட்டால் சுகாதாரத்துறை, காவல் துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மூலம் பொது மக்கள் அந்த பகுதியை விட்டு செல்லாமல் தடுப்பு சோதனை சாவடி அமைக்கமாறும், தன்னார்வலர்கள் மூலம் அவர்களுக்கு தேவையான உணவு போன்ற அத்தியாவசிய பொருட்கள், மற்றும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள அனைத்து வசதிகளும் உடனடியாக மேற்கொள்ளமாறு அறிவுறுத்தினார்.

மேலும் முதல் நிலை தொடர்பாளர்கள் மற்றும் இரண்டாம் நிலை தொடர்பாளர்கள் ஆகியோரை அடையாளம் கண்டு அவர்களை தனிமை படுத்துதல் பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களிடம் தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.சாந்தி, மாவட்ட ஆட்சியர் நேர் முக உதவியாளர் (பொது) திரு.ரகுகுமார், உதவி இயக்குநர்கள் ( ஊராட்சிகள்) திரு.ராஜசேகர், (நில அளவை) திரு.வெங்கடேசன், மாவட்ட ஆட்சியர் நேர் முக உதவியாளர் ( நிலம்) திருமதி. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் திரு.கௌரிசங்கர் , மாவட்ட ஆட்சியர் அலுவல மேலாளர் திரு.ஜெய்சங்கர், வட்டாட்சியர் திருமதி.சத்யா ஆகியோர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**